# இயற்கை வேளாண்மை

# தாவர பூச்சிவிரட்டிகள்



"தட்டான் தாழப் பறந்தால் தப்பாமல் மழை"
"அந்தி ஈசல் அடைமழைக்கு அறிகுறி"



## விவேகானந்த கேந்திரம்
## நார்டெப்

(இயற்கை வள அபிவிருத்தித் திட்டம்)

கன்னியாகுமரி - 629 702.

## பூண்டுக் கரைசல்

**செய்முறை:** பூண்டு - 300 கிராம், மண்ணெண்ணெய் - 150 மி.லி (பூண்டை லேசாக அரைத்து மண்ணெண்ணெயில் 24 மணி நேரம் ஊறவைக்கவும்)

**பயன்படுத்தும் முறை:** 60 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கர் நிலத்திற்கு தெளிக்கவும்.

**கட்டுப்படுத்தப்படும் பூச்சிகள்:** பருத்திக்காய்த் துளைப்பான், அசுவுணி, படைப்புழு, நெல் செம்புள்ளி நோய், கொலராடா வண்டுகள், பருத்தி சிகப்புப்பூச்சி, பால்ஸ் காட்லிங் அந்துப்பூச்சி, வீட்டு ஈ, முட்டைக்கோஸ் புழு, ஜப்பானிய வேர்முடிச்சுப் புழு, காப்ரா வண்டுகள், மெக்ஸிகன் அவரை வண்டு, சிகப்பு சிலந்தி, கொசு, வெங்காய இலைப்பேன், பழவகைகளைத் தாக்கும் பூச்சிகள், பயிறு வண்டு, வேர் முடிச்சுப்புழு, உண்ணிகள், வெள்ளை ஈ, கம்பிப்புழு, உருளைக்கிழங்கு அந்துப்பூச்சி, கரும்பு குருத்துப்புழு.

## வேம்புக் கரைசல்

**செய்முறை - I:** வேப்பிலை - 6 கிலோ (இரவு முழுவதும் ஊறவைக்கவும். மறுநாள் அரைத்துக் கொள்ளவும்)

**பயன்படுத்தும் முறை:** 60 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கர் நிலத்திற்கு தெளிக்கவும்.

**செய்முறை - II:** ஓடு நீக்கிய வேப்பம் விதை - 3 கிலோ (அரைத்து இரவு முழுவதும் ஊற வைக்கவும்)

**பயன்படுத்தும் முறை:** 60 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கர் நிலத்திற்கு தெளிக்கவும்.

**செய்முறை - III:** வேப்பம் பிண்ணாக்கு - 6 கிலோ (அரைத்து இரவு முழுவதும் ஊற வைக்கவும்)

**பயன்படுத்தும் முறை:** 60 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கர் நிலத்திற்கு தெளிக்கவும்.

**செய்முறை - IV:** வேப்பம் எண்ணெய் - 3 லிட்டர்

**பயன்படுத்தும் முறை:** 100 லிட்டர் தண்ணீர் சேர்த்து நிலத்திற்கு தெளிக்கவும். (தயாரித்த உடனே தெளிக்க வேண்டும்)

**கட்டுப்படுத்தப்படும் பூச்சிகள்:** ஆசியச் சோள வண்டு, கருப்புத் தரை வண்டு, பழுப்பு அசுவுணி, புகையான், முட்டைக்கோஸ் அசுவுணி, முட்டைக்கோஸ் வெள்ளை வண்ணத்துப்பூச்சி, ஆமணக்குப் படைப்புழு, எலுமிச்சை இலைத்துளைப்பான், எலுமிச்சைத் தண்டு பூச்சி, எலுமிச்சைச் சிகப்புச் சிலந்தி, பருத்திக் காய்ப்புழு, படைப்புழு, ஜெர்மன் கரப்பான் பூச்சி, பச்சை அசுவுணி, முட்டைக்கோஸ் புழு, ஜீன் பூச்சி, பாலைவன வெட்டுக்கிளி, இளஞ்சிகப்புக் காய்ப்புழு, நெல் பச்சைத் தத்துப்பூச்சி, நெல் தண்டு துளைப்பான்

## குறிப்பு:

1. எல்லா வகை தாவர கரைசல்களையும், பருத்தி துணிக்கொண்டு வடிகட்டிய பின்னர், **ஒரு லிட்டருக்கு 4 கிராம் காதிசோப் கரைசல்** சேர்த்து தெளிக்க வேண்டும்.

2. தாவரக்கரைசல் அனைத்தும் காலை சூரியோதயத்திற்கு முன்பும், மாலை சூரியன் மறைவிற்கு பின்பும் தெளித்தால் அதிக பலன் கிடைக்கும்.

3. தங்களின் பயிர் அளவு, பூச்சிகளின் தாக்குதல் இவற்றிற்கேற்ப கரைசல்களை கூட்டியோ, குறைத்தோ தெளிக்கலாம்.

4. செடிகளை நடும்போதே வேப்பம்பிண்ணாக்கு இட்டு நட்டால் பாக்டீரியா, வைரஸினால் ஏற்படும் நோய்கள், பூச்சித்தாக்குதல் குறையும்.